2019 ஜூலை 1]

உண்மை, 2005–2006, 2015 ஆம் ஆண்டுகளில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் அறிவித்த (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மின்மிகை மாநிலம் என்பது இன்றளவும் இருந்து கொண்டிருக்கின்றது. இதுபோன்று, என்றும் இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

3—

சமுதாயக் கூடம்

***5955—டாக்டர் V.P.B. பரமசிவம்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், இ. சித்தூர் ஊராட்சி, மொங்காம்பட்டி மற்றும் கோவிலூர் ஊராட்சி, இராமநாதபுரம் ஆகிய பகுதிகளில் சமுதாயக் கூடம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையெல்லாம் உருவாக்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களையும், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேடசந்தூர் தொகுதி, வேடசந்தூர் ஊராட்சி ஒன்றியம், இ.சித்தூர் ஊராட்சியிலுள்ள மொங்காம்பட்டி கிராமத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் அதற்கருகில் உள்ள

தண்ணீர் பந்தம்ப்பட்டி கிராமத்தில் சமுதாயக் கூடம் கட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களின் கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், கோவிலூர் ஊராட்சியிலுள்ள இராமநாதபுரம் கிராமத்தில் போதிய இடவசதி இல்லாத காரணத்தினால் அக்கிராமத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள கோவிலூரில் சமுதாயக் கூடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் வறட்சிப் பகுதியாக அறியப்பட்டிருக்கின்ற வேடசந்தூர் தொகுதியில் பருவமழை பொய்த்திருக்கின்ற இந்தக் காலகட்டத்தில் 154 உட்கடை கிராமங்களுக்குப் புதிதாக காவேரி கூட்டுக் குடிநீர்த் திட்ட இணைப்பு வழங்க 13 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து அரசாணை வெளியிட்ட எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும், அதற்குப் பரிந்துரை செய்த எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த வனத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேடசந்தூர் ஒன்றியத்தில் அதிகமான மக்கள்தொகை கொண்டிருக்கின்ற இ. சித்தூர் மற்றும் கோவிலூர் ஊராட்சிகளுக்கு புதிய சமுதாயக் கூடங்கள் கட்டித் தரப்படும் என்ற மகிழ்ச்சியான செய்தியைத் தந்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய காலகட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தை சிறப்பான முறையிலே, மக்களுக்குப் பயனுள்ள வகையிலே செயல்படுத்துகின்ற மாநிலங்களிலே, தமிழகம் முன்னோடி மாநிலமாக இருந்து கொண்டு வருகிறது. அந்தத் திட்டத்தில் செய்யப்படுகின்ற பணிகள் மக்களுக்கு பயனுள்ள வகையில், அதே நேரத்தில் ஒரு asset creation ஆக, இந்த மாநிலத்திற்கு சொத்தை உருவாக்குகின்ற அடிப்படையில் திட்டங்கள் தீட்டப்பட

வேண்டுமென்று மத்திய அரசால் சொல்லப்பட்டு, அந்தந்த மாநிலங்கள் இந்தத் திட்டத்தின்கீழ் செய்ய வேண்டிய பணிகளை, தங்களுக்கேற்ப கோரிக்கைகள் வைத்து மாற்றிக்கொண்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், நம்முடைய தமிழகத்தில் ஒரு சில பணிகள் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது. உதாரணத்திற்கு, உணவு தானியக் கிடங்குகள், கதிரடிக்கும் களங்கள் எல்லாம் இந்தத் திட்டத்தில் ஏற்கெனவே செய்யப்பட்டு வருகின்றன. அதேபோல, வேறு சில திட்டங்களையும் சேர்க்க வேண்டியிருக்கிறது. குறிப்பாக, நீர் மேலாண்மைக்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றார்கள். அந்தத் திட்டத்தில் வெள்ளத் தடுப்புச் சுவர் என்று சொல்லக்கூடிய retaining wall என்பது MGNREGS–ல் செய்ய முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. நாங்கள் கேட்ட இந்தச் சமுதாயக் கூடத்திற்கு பல்வேறு காலக்கட்டங்களில் நிதி வழங்கினாலும்கூட, இப்போது இதற்கு நிதியில்லா சூழ்நிலை இருக்கிறது. சுமார் 20 இலட்சம் ரூபாயில் சமுதாயக் கூடம் கட்டுகின்ற பணியையும் MGNREGS–ல் asset creation என்ற வகையில் சேர்க்கலாம். பல்வேறு சட்டமன்ற உறுப்பினர்கள் பகுதிநேர நியாய விலைக் கடைகளைக் கொண்டு வர வேண்டுமென நினைத்தால்கூட அரசுக் கட்டடம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதில் PDS shop–ஐ சேர்க்கலாம். திடக் கழிவு மேலாண்மைத் திட்டத்தைச் சிறப்பாக செய்து கொண்டிருக்கின்ற உள்ளாட்சித் துறை மூலமாக அத்திட்டத்தில் தயாரிக்கப்படும் Bio–gas–ஐக் கொண்டு gasifier crematorium–ஐ ஒவ்வோர் ஊராட்சியின் தலைமையிடத்திலும் MGNREGS மூலம் அமைக்கலாம். ஏனென்றால் சுடுகாடு அமைப்பதில் இடப்பிரச்சினைகள், பல்வேறு ஜாதி அமைப்புகளுக்குள் பல்வேறு பிரச்சினைகள் இருக்கின்றன. ஆகவே, retaining wall, gasifier crematorium, பகுதிநேர நியாய விலைக் கடை மற்றும் 20 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சமுதாயக் கூடங்கள் அமைப்பது ஆகிய இந்த நான்கு பணிகளை இத்திட்டத்தில் இணைப்பதற்கு மத்திய அரசிடம் அனுமதி பெற அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்துகளை வழங்கியுள்ளார்கள். இருந்தாலும்கூட, மத்திய அரசாங்கத்தினுடைய norms–படி சில வேலைகள் எடுக்கப்படுவதில்லை. சமுதாயக் கூடங்களைப் பொறுத்தளவிற்கு ஊரகப் பகுதிகளில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சியில் 2011-2012 முதல் 2015–2016 ஆம் ஆண்டு வரை 2,223 சமுதாயக் கூடங்கள் 268 கோடியே 54 இலடசம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ளன. இப்போதுகூட மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தில் சமுதாயக் கூடம் எடுக்கப்பட்டிருக்கிறது. சுய உதவிக் குழுக்கள் கூட்டம் நடத்துவதற்காகவும் ரூ.65 இலட்சத்திலான சமுதாயக் கூட கட்டடங்களை நாம் எடுத்திருக்கிறோம். இருந்தாலும்கூட மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை ஏற்று கண்டிப்பாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுசென்று அந்தப் பணிகளை கண்டிப்பாக எடுக்க மத்திய அரசாங்கத்திற்குப் பரிந்துரை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம் அவர்கள்.

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லி, வேடசந்தூர் தொகுதி, வடமதுரை பேரூராட்சி மற்றும் வேடசந்தூர் பேரூராட்சிப் பகுதிகளில் புதிய பேருந்து நிலையக் கட்டடம் கட்ட இந்த ஆண்டு நிதி ஒதுக்கி ஆவன செய்யப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, அந்தத் தொகுதி மக்களுக்காகச் செய்ய வேண்டுமென்ற அக்கறையிலே கேட்டிருக்கிறார். ஆகவே, கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு இதனைக் கொண்டு சென்று, நிதிநிலையை அனுசரித்து பரிசீலிக்கப்படும்.

2019 ஜூலை 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமுதாயக் கூடம் கட்டுவது என்பது உண்மையிலேயே ஏழையெளிய மக்களுக்கான ஒரு நல்ல திட்டம். நான் கடந்த ஆண்டு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 3,000 மக்கள்தொகை கொண்ட ஒரு கிராமத்திற்கு சமுதாயக் கூடம் கட்டுவதற்கு 70 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறேன். பக்கத்திலே இருக்கின்ற இன்னொரு கிராமமான அகரம் பஞ்சாயத்துக்கு சமுதாயக் கூடம் கட்ட 60 இலட்சம் ரூபாய் நிதியை ஒதுக்கியிருக்கிறேன். ஏழையெளிய மக்கள், உண்மையிலேயே கஷ்டப்படுகிறவர்கள், பெரிய திருமண மண்டபங்களை சுப நிகழ்ச்சிகளுக்கு எடுக்க முடியாது; சின்னச் சின்ன நிகழ்ச்சிகளுக்கு இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், தாம்பரம் நகராட்சியில் வார்டு எண் 37 மற்றும் வார்டு எண் 11–ல் இரண்டு சமுதாயக் கூடங்கள் கட்டப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. பலமுறை எடுத்துச் சொல்லியும் அரசு அதிகாரிகள் அவற்றைத் திறக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தலையிட்டு உடனடியாக அந்த சமுதாயக் கூடங்களைத் திறந்து வைக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதேபோல மாடம்பாக்கம் பேரூராட்சியில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ஒரு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு பிரமாதமாக இருக்கிறது. ஆனால் நடைமுறையில் மக்கள் பயன்பாட்டுக்கு இல்லாத ஒரு சூழ்நிலை உள்ளது. அதேபோல பம்மலில்கூட ஒரு சமுதாயக் கூடம், நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டு பொதுமக்களுக்கு பயனில்லாமல், பராமரிப்பு இல்லாத நிலையில் இருக்கிறது. தொண்டு நிறுவனங்கள் இதுபோன்ற சமுதாயக் கூடங்களைப் பராமரிப்பதற்கு முன்வர வேண்டும். ஒரு சில இடங்களில் பாத்திரங்கள் இருக்கின்றன, சில இடங்களில்* chairs *இல்லை, சில இடங்களில் வசதிகள் இல்லை.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இராஜா, சுருக்கமாகக் கேளுங்கள். இன்னும் நிறைய பேருக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டியதிருக்கிறது. நிறைய பேர் கையைத் தூக்குகிறார்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்களின் நலன் கருதி, திறந்து வைத்திருக்கின்ற சமுதாயக் கூடங்கள் நல்ல முறையில் மக்களுக்குப் பயன்படுவதற்கும், திறக்காமல் இருப்பவற்றைத் திறப்பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தாம்பரம் நகராட்சியைப் பற்றி குறிப்பிட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியிலே மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் 162 சமுதாயக் கூடங்கள் 35 கோடியே 95 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டன. அதேபோல, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் ஆட்சிக் காலத்தில் 16 கோடியே 78 இலட்சம் ரூபாய் செலவில் 45 சமுதாயக் கூடங்கள் கட்டும் பணிகள் பல்வேறு நிலைகளில் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட தாம்பரம் பகுதியில் பயன்படாமல் இருக்கிற சமுதாயக் கூடங்களைப் பயன்படுத்துவதற்கு கண்டிப்பாக தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியில் கட்டப்பட்ட சமுதாயக் கூடங்களை உடனடியாகத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்குக் கொண்டு வரப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலக் கேள்விக்கு சம்பந்தமில்லையென்று சொல்லிவிடக் கூடாது. ஏனென்றால் நீண்டகாலம் இந்தத் துறையிலே. . .

2019 ஜூலை 1]

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்வியையொட்டியே துணைக் கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. கே.என். நேரு: *நான் கேட்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் எழுந்திருக்கும்போதே வேறு கேள்விக்குத் தயாராக இருந்தால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்ன செய்வார்கள்?*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மாநகராட்சி சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான்கைந்து முறை கொண்டு வந்திருக்கிறேன். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை* smart city *என்று அறிவித்து, மத்திய, மாநில அரசுகள் மூலமாக வருகின்ற நிதியையெல்லாம் வைத்து அனைத்துப் பகுதிகளுக்கும் பார்க் மற்றும் நடைபாதை வசதியை செய்து தந்து கொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட 65 வார்டுகளைக் கொண்ட திருச்சி மாநகராட்சியிலே, பல்வேறு வார்டுகளிலே சாலைகள் மிகவும் மோசமாக பழுதடைந்திருக்கின்றன. இதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமும் சொல்லியிருக்கிறேன்; அதைச் சரி செய்துதர வேண்டுமென்று ஆணையர் அவர்களிடம் கேட்டபோது, இதற்கென தனி நிதி இல்லை, நிதி ஒதுக்கீடு செய்யப்படும்போது செய்து தருகிறோம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.*

திருச்சி நகரத்திலே மிக அதிகமான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டிருக்கிறது. திருச்சி நகரத்தினுடைய நுழைவு வாயில் முதல் அந்தச் சாலையை நான்கு வழிச் சாலையாக மாற்றுவதற்கான நிதியெல்லாம் வந்திருக்கிறது. ஆனால், அந்த வேலை செய்து முடிக்கப்படாமல் இருக்கிறது. அண்ணா சிலையிலிருந்து திருச்சிக்குள் போகின்ற அந்தப் பாதையை நான்கு வழிச் சாலையாக மாற்றினால்தான், திருச்சி மாவட்டத்திற்குள்ளே போக்குவரத்து நெரிசல் குறையும். குடிதண்ணீரைப் பொறுத்தவரையில், பல பேர் பேசவிருக்கிறார்கள்; எங்களுடைய தலைவர் அவர்களும் இதுகுறித்து பேச இருக்கிறார்கள். எனவே, அதற்குள் நான் செல்ல விரும்பவில்லை. ஆகவே, சாலையைச் சீர் செய்து, போக்குவரத்து நெரிசலை நீக்குகின்ற பணியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விரைவிலே செய்து தருவாரா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் அவர்கள் குறிப்பிட்ட* smart city *திட்டத்தைப் பொறுத்தவரையில், மத்திய, மாநில அரசுகள் செய்து தரக்கூடிய திட்டத்தில்* ABD area *என்று ஒரு* area*–வை வரையறை செய்கிறார்கள். அப்பகுதிகளில் பணிகளை நாம் எடுக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்னென்ன பணிகளை எடுத்துக் கொள்ளலாம் என்று மத்திய அரசாங்கம்* norms *கொடுத்திருக்கிறது. இருந்தாலும்கூட, பலமுறை மத்திய அமைச்சரை சந்தித்துப் பேசியுள்ளோம்; மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றதன்பேரில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கின்றார்கள்.* ABD area*–வை கொஞ்சம் விரிவுபடுத்தச் சொல்லியிருக்கின்றோம். சில பணிகள் அவசியமாயிருப்பின், அதையொட்டியிருக்கக்கூடிய வார்டுகளிலும் செய்து கொடுப்பதற்காக தற்போது பேசி முடித்திருக்கின்றோம்; அதற்கு ஒப்புதல் வழங்கப்படும் எனத் தெரிகிறது. அதேபோன்று சாலைகள் பழுதடைந்திருப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். நிதிநிலைமையைப் பொறுத்து பழுதான சாலைகள் கண்டிப்பாக சரி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 4, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பெ. சீத்தாபதி, மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

4—

மீனவர்களுக்கு வீடுகள்

***26907—திருமதி பெ. சீத்தாபதி:**

மாண்புமிகு மீன் வளம் மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—